**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமசந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சந்திரசேகர் | **PW-2** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - ஞானவேல் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 53 |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் ஈரோடு அமராவதி நகரில் குடியிருந்து அமராவதி பஸ் ஸ்டாப் அருகே கறிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 10 மணி அளவில் நான் எனது கடையில் இருக்கும் பொழுது ஒரு சத்தம் கேட்டது. நான் என் கடையிலிருந்து வெளியே வந்து பார்க்கும் பொழுது ஒரு இருசக்கர வாகனம் ஹீரோ ப்ளஸ்ஸர்-இல் ஒரு பெண்ணும் அவரது மகளும் வந்தனர். அவர்களுக்கு விபத்து ஏற்பட்டது அவர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த குழந்தைக்கு தலையிலும், வயிற்று பகுதியிலும் காயம் இருந்தது. அந்த பெண்மணிக்கு லேசாக காயம் ஏற்பட்டிருந்தது. நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவைத்து அடிபட்டவர்களை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி விபத்தில் அடிபட்ட குழந்தை இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன் ஆஜர் எதிரியை நான் பார்க்கவில்லை. எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீஸ் விசாரணை கூறிவிட்டு தற்பொழுது போலீஸ் விசாரணைக்கு எதிராக சாட்சி அளித்துள்ளதால் மேற்படி வாக்குமூலத்தை பொறுத்து மட்டும் பிறர் சாட்சியாக பாவிக்க அனுமதி கூறப்பட்டது அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 11.09.2020 அன்று காலை 10: 25 மணி அளவில் TN 33 BS 7733 என்ற இருசக்கர வாகனத்தை சுகன்யா என்பவர் ஓட்டிக்கொண்டும் பின்னால் அவரது மகள் ஹர்ஷிதாவை அமர வைத்தும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி எனது கடைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த சமயம் ஆஜர் எதிரி TN 30 N 1206 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சுகன்யா ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் மேற்படி பேருந்தின் இடது பக்க சக்கரம் அர்ஷிதாவின் உடல் மீது ஏறி இறங்கி விட்டதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் வழக்கு சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்று எதிரியை தெரியாது என்று சாட்சியம் வருகிறது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமசந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சிவக்குமார் | **PW-3** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - சக்கையாதேவர் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 52 |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் ஆர் என் புதூர் அமராவதி நகரில் குடியிருந்து ஈரோடு பவானி ரோட்டில் அமராவதி நகரில் பஸ் ஸ்டாப்பில் ஸ்ரீ சக்தி விநாயகா அக்ரோ ஏஜென்சிஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2020 ஆம் ஆண்டு ஒரு நாள் காலை 10:30 மணியளவில் நான் என் கடையில் இருக்கும் பொழுது திடீரென்று என் கடைக்கு முன்பாக ஒரு சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்க்கும் பொழுது ஒரு குழந்தையும் அவரது அம்மாவும் தனித்தனியாக கீழே கிடந்தார்கள். அரசு பேருந்து அங்கு நின்று கொண்டிருந்தது ஒரு இருசக்கர வாகனமும் அங்கு இருந்தது. அந்த குழந்தையை நான் சென்று பார்க்கும் பொழுது அது ஏற்கனவே இறந்து இருந்தது. ஆம்புலன்ஸை வரவழைத்து மேற்படி இருவரையும் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் இரண்டு வாகனங்களின் பதிவு எண்கள் எனக்கு நினைவில்லை. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சி சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீஸ் விசாரணை கூறிவிட்டு தற்பொழுது போலீஸ் விசாரணைக்கு எதிராக சாட்சி அளித்துள்ளதால் மேற்படி வாக்குமூலத்தை பொறுத்து மட்டும் பிறர் சாட்சியாக பாவிக்க அனுமதி கூறப்பட்டது அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

கடந்த 11.9.2020 அன்று காலை 10: 25 மணி அளவில் TN 33 BS 7733 என்ற இருசக்கர வாகனத்தை சுகன்யா என்பவர் ஓட்டிக்கொண்டும் பின்னால் அவரது மகள் ஹர்ஷிதாவை அமர வைத்தும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி எனது கடைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த சமயம் ஆஜர் எதிரி TN 30 N 1206 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சுகன்யா ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் மேற்படி பேருந்தின் இடது பக்க சக்கரம் அர்ஷிதாவின் உடல் மீது ஏறி இறங்கி விட்டதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் வழக்கு சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்று எதிரியை தெரியாது என்று சாட்சியம் வருகிறது என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.</u>**